யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

**Field Work Centre**

# தவணைப் பரீட்சை, யூன் - 2016
# Term Examination, June - 2016

FWC

| தரம் :- 13 (2016) | புள்ளித்திட்டம் | அரசியல் விஞ்ஞானம் |
|---|---|---|

## அரசியல் விஞ்ஞானம் – I

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01) | **5** | 11) | **3** | 21) | **1** | 31) | **2** | 41) | **3** |
| 02) | **1** | 12) | **5** | 22) | **5** | 32) | **1** | 42) | **4** |
| 03) | **5** | 13) | **3** | 23) | **4** | 33) | **4** | 43) | **5** |
| 04) | **5** | 14) | **4** | 24) | **1** | 34) | **4** | 44) | **1** |
| 05) | **5** | 15) | **1** | 25) | **3** | 35) | **1** | 45) | **4** |
| 06) | **1** | 16) | **3** | 26) | **1** | 36) | **5** | 46) | **1** |
| 07) | **1** | 17) | **5** | 27) | **2** | 37) | **2** | 47) | **5** |
| 08) | **2** | 18) | **1** | 28) | **4** | 38) | **5** | 48) | **4** |
| 09) | **1** | 19) | **2** | 29) | **5** | 39) | **2** | 49) | **1** |
| 10) | **3** | 20) | **3** | 30) | **4** | 40) | **5** | **50)** | **3** |

## அரசியல் விஞ்ஞானம் – II

### பகுதி - A

01) 1) கிரேக்க காலம் 2) வெஸ்பாலியா உடன்படிக்கை

02) 1) அரிஸ்ரோட்டில் 2) மாக்கியவல்லி

03) 1) பொருளாதாரக் காரணிகளில் கவனம் செலுத்துதல்
2) வகுப்பு முரண்பாடுகளை அடிப்படையாகக் கொண்டிருத்தல்.

04) 1) அரச நிர்வாகிகளை நியமித்தல்
2) அரச நிர்வாகிகளை பதவி நீக்குதல்

05) 1) தாராண்மை ஜனநாயகக் கோட்பாடுகளுக்கும் சமதர்ம பொருளாதார கோட்பாடுகளும் இணைக்கப்பட்டு உருவாக்கபப்பட்டது.
2) பொருளாதாரத்தை முகாமைத்துவம் செய்வதில் அரசின் கூடிய தலையீடு காணப்படும்.

06) 1) ஒற்றைக் குடியுரிமை 2) கூட்டாட்சி என்ற சொல் பயன்படுத்தப்படவில்லை
- ✶ எல்லா மாநிலத்துக்கும் சமபிரதிநிதித்துவமின்மை.
- ✶ மாநில ஆளுநர் ஜனாதிபதியால் நியமிக்கப்படுதல்.
- ✶ மத்திய அரசு மாநிலங்களை கலைத்தல்

07) 1) அரசியலமைப்புக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரங்கள்
2) ஒதுக்கப்பட்ட நிரலின் கீழ் உரித்தாகும் அதிகாரங்கள்
நீதிமன்றத் தீர்ப்புக்கள் மூலம் உரித்தான அதிகாரங்கள்

08)
- ✶ நீதி மற்றும் பொலிஸ் அமைச்சு
- ✶ பாதுகாப்பு மற்றும் சிவில் பாதுகாப்பு விளையாட்டு அமைச்சு
- ✶ நிதி அமைச்சு
- ✶ பொருளாதார அமைச்சு வர்த்தக அமைச்சு
- ✶ போக்குவரத்து சூழல் ஊடக அமைச்சு
- ✶ வெளிவிவகார அமைச்சு
- ✶ உள்நாட்டு விவகார அமைச்சு

09) 1) நிதி மசோதாக்களை செனற்சபையில் ஆரம்பிக்க முடியாது.
2) அரசாங்கத்துக்கு எதிராக கொண்டு வரப்படும் நம்பிக்கையில்லாப் பிரேரணையை முதலில் செனற் சபையில் சமர்ப்பிக்க முடியாது.

10) 1) சட்டத்தின் முன் சகலரும் சமன்
2) நீதிமன்றத்தினால் மட்டுமே வழக்கத்திலுள்ள சட்டத்தின்படி ஒருவருக்கு தண்டனை வழங்க முடியும்.

11) 1) சமய சீர்திருத்த இயக்கங்கள்
2) அரசியல் சீர்திருத்த இயக்கங்கள்

12) 1) சட்ட நிர்வாக சபை உறுப்பினர்கள் - 06
2) சட்ட நிருபணசபை உறுப்பினர்கள் - 15

13) 1) கல்வி கற்றோர் (ஆங்கிலக் கல்வி)
2) சொத்துள்ளோர்
✶ வயது வந்த வெளிநாட்டவரல்லாத ஆண்கள்

14) 1) உத்தியோகபற்றுடையோர் - 14 அங்கத்தினர்
2) உத்தியோகபற்றற்றவர்கள் - 23 அங்கத்தினர்

15) 1) சுதேச / உள்நாட்டு அமைச்சர்கள் - 07
2) அரச செயலாளர்கள் / காரியதரிசிகள் - 03

16) 1) யாப்பின் 29 வது விதியின் 2ம் உறுப்புரை
2) செனற்சபை
✶ பல அங்கத்தவர் தேர்தல் தொகுதி
✶ கோமறைக்கழகம்
✶ நீதிச்சேவை, பொதுச்சேவை ஆணைக்குழு
✶ தேசாதிபதிக்குரிய நியமன அதிகாரங்கள்

17) 1) அரசின் தலைவர் - ஜனாதிபதி
2) அரசாங்கத்தின் தலைவர் - பிரதம மந்திரி

18) 1) அரசியல் யாப்பை மீறியிருத்தல்
2) அரசுக்கு துரோகம் செய்தல்
✶ இலஞ்சம் வாங்குதல்
✶ அதிகாரத் துஷ்பிரயோகம்
✶ துர் நடத்தை

19) 1) உயர் நீதிமன்றத்துக்கு விண்ணப்பித்தல்
2) ஓம்பூட்ஸ்மனிடம் முறையிடுதல்
✶ மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறையிடல்

20) 1) உயர் நீதிமன்றம்
2) மேன்முறையீட்டு நீதிமன்றம்

## பகுதி - B

01) (அ) அரசுக்கும் சமூகத்துக்கும் இடையேயான வேறுபாடுகளை பின்வரும் தலைப்புக்களில் வேறுபடுத்திக் காட்ட மடியும்.

✶ தோற்றம் :-
சமூகம் அரசுக்கு முன்னர் தோன்றியது. மனிதன் நாகரீக வாழ்க்கைக்குப் பழக்கப்பட்டு பொது நோக்கினுக்காக சமூகமாக ஒழுங்கமைந்ததன் பின்னரேயே அரசு தோன்றியது.

✶ தோற்றத்தின் இயல்பு :-
அரசு செயற்கை நிறுவனம். சமூகம் இயற்கையாகத் தோன்றிய நிறுவனம்.

✶ பரவல் (ஆள்புல எல்லை) :-
அரசுக்கு ஒரு குறிப்பிட்ட நிலப்பிரதேசம் அத்தியாவசியமானது. சமூகத்துக்கு அது அவசியமில்லை.

✶ அதிகாரம் :-
அரசுக்கு இறைமை அதிகாரம் உண்டு. சமூகத்துக்கு அரசுக்குரிய அதிகாரத்தை விட மேலான அதிகாரம் இல்லை.

✶ உள்ளடக்கம், பணிகள், கட்டமைப்பு என்ற விதத்தில் இதற்கான விடை அமைந்திருத்தல்

(ஆ) ✶ கோட்பாட்டு ரீதியாக அரசு என்பது பிரிக்க முடியாத கண்ணுக்குப் புலப்படாத கூறாகும். அரசாங்கம் புலனீடான நிறுவனமாகும்.

✶ அரசு எஜமானனாகவும் அரசாங்கம் சேவகனாகவும் காணப்படுகின்றன.

✶ அரசு என்பது ஒரு பரிபூரணக்கூறாக இருக்கும் போது அரசாங்கம் என்பது அரசின் ஒரு பகுதி மட்டுமே ஆகும்.

✶ அரசு முழுச் சமூகத்தையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. ஆனால் அரசாங்கமானது குடிகளின் ஒரு பகுதியினரின் ஆதரவைப் பெற்ற அரசியல் நிறுவனமாகும்.

✶ அரசு மாற்றமுறாது. அரசாங்கம் காலத்துக்குக் காலம் மாற்றமடையும்.

✶ அரசுக்கு எதிராக கிளர்ந்தெள முடியாது. நியாயமான காரணங்களுக்காக அரசாங்கத்தை எதிர்த்தல் தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படுவதில்லை.

✶ அரசின் இருப்புக்கு நிச்சயமான எல்லைகளைக் கொண்ட நிலப்பிரதேசம் அவசியம். ஆனால் அரசின் எல்லைக்கு வெளியேயும் அரசாங்கம் அமையலாம்.

02) (அ) மனிதன் அரசியலைப் படிப்பதற்கு இரு வழிமுறைகள் உண்டு. அவையாவன

1. முறைசார் வழிமுறை
2. முறைசாரா வழிமுறை

முறைசார் வழிமுறையில் நிறுவன ரீதியான கல்வி விடயங்களும், முறைசாரா வழிமுறையில் குடும்பம், சமய நிறுவனங்கள், ஊடகங்கள், சமவயதுக் குழுக்கள், அபிப்பிராயத் தலைவர்கள், பொருளாதாரக் காரணிகள், அரசாங்கம், அரசியற் கட்சிகள் என்பன அடங்குகின்றன.

(ஆ) அரசியல் முறையில் வாழும் மக்கள் அவ் அரசியல் முறைமையின் பண்புகள், நம்பிக்கைகள், மதிப்பீடுகள் ஆகியவற்றின் கூட்டாகும் என்னும் வகையில் விளக்குதல் வேண்டும். மேலும் அரசியல் கலாசாரத்தை வகைப்படுத்தி விளக்கியிருத்தல் வேண்டும்.

(இ) ஊடகம் ஜனநாயகம் என்பதன் விளக்கம்.
ஊடகம் ஜனநாயகம் காணப்படுவதன் மூலம் ஜனநாயகம் எவ்வாறு பாதுகாக்கப்படலாம் என விளக்குதல் வேண்டும்.

(ஈ) சோசலிச அரசாங்கம் என்பதன் விளக்கம்
சோசலிசம் என்பது நிலத்தையும் உழைப்பையும் அடிப்படையாகக் கொண்ட உற்பத்தி முறைகளில் தனியார் உரிமைக்குப் பதிலாக அவற்றின் மீது சமூக உரிமை நிலவவேண்டும் என வலியுறுத்தும் ஓர் அரசியல் கருத்தாகும்.

✶ கம்யூனிசக் கொள்கைகளின் அடிப்படையில் ஒழுங்கமைந்த அரசியல் நிறுவன முறை

✶ ஒரு கட்சியின் ஆதிக்கம்

✶ மத்திய மயப்படுத்தப்பட்ட திட்டமிடல் முறையின் மூலம் பொருளாதாரத்தைக் கூட்டுப் படுத்துதல்.

✶ பொருளாதார சமத்துவம் என்பன போன்ற விடயங்கள் விளக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

03) (அ) ✶ இறைமை அதிகாரம் மத்திய அரசாங்கத்திடம் காணப்படல்.

✶ ஒற்றை நிர்வாகம், ஒற்றை நீதி பரிபாலனம், ஒற்றைக் குடியுரிமை

✶ உள்ளூராட்சி மன்றங்களுக்கு நிர்வாக அதிகாரங்களை வழங்கி நடைமுறைப்படுத்தல்

✶ சட்ட மன்றத்தில் சகல அதிகாரங்களும் காணப்படல்.

(ஆ) **நிறைகள்**

✶ அரசாங்க செயற்பாடுகளை நடாத்துவது இலகு

✶ மக்களின் உரிமைகள் சரியான முறையில் பேணப்படும்.

✶ அரசாங்கம் உறுதியாக நிலைத்திருக்கும்.

✶ சிறுபான்மையோரின் விருப்பங்கள் சுதந்திரங்கள் பாதுகாக்கப்படும்.

✶ ஆட்சியாளர்களின் எதேச்சதிகாரப் போக்கைத் தடுக்கிறது.

✶ அரசியலமைப்பை மாற்றி அமைப்பதற்கு குறிப்பிட்ட சில திருத்த முறைகள் காணப்படுதல்.

**குறைகள்**

✶ எழுதப்பட்ட அரசியலமைப்பு நெகிழ்ச்சியற்ற நிலைக்குக் காரணமாக அமையும். சகல முக்கியமான விடயங்களும் எழுதப்பட்டிருப்பதனால் சட்ட விதிகளின் அடிப்படையில் மட்டுமே செயற்பாடுகளுக்கு முயற்சி எடுக்கப்படும்.

✶ காலத்தின் தேவைகளுக்கு ஏற்ப அவசரமாகவும் எளிதாகவும் அதனை மாற்றுவது கடினமாகிறது.

✶ வழக்கறிஞர்களினதும் நீதிபதிகளினதும் விளையாட்டுப் பொருளாகவும் மாறலாம்.

✶ நீதித்துறை காலத்துக்குக் காலம் முன்வைக்கும் வேறுபட்ட விவரணங்கள் தீர்க்கப்படாத முரண்பட்ட எண்ணங்களைத் தோற்றுவிக்கும்.

(இ) ✶ மக்களுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் தொடர்பினை ஏற்படுத்துதல்.

✶ கொள்கைகளை உருவாக்குதலும் நடைமுறைப்படுத்தலும்.

✶ பொதுசன அபிப்பிராயத்தை ஒழுங்குபடுத்துதல்

✶ மனித உரிமைகளையும் சுதந்திரங்களையும் பாதுகாத்தல்.

✶ மக்களின் அரசியல் அறிவை விரிவுபடுத்துதல்

✶ அரசியல் தலைவர்களை பயிற்றுவித்தல்

✶ அரசியல் நவீனப்படுத்தல்.

(ஈ) மனிதர்களை அரசியல் முறைமைக்கு பழக்கப்படுத்துவதற்கும் அதனூடாக அரசியல் முறைமைக்கு துலங்குவதற்கு பழக்கப்படுத்துவதற்குமான செயன்முறையை மேற்கொள்வதற்கு உதவுவதே அரசியல் சமுதாயப்படுத்தல் முகவர்களின் நோக்கமாகும்.

✶ குடும்பம், கல்வி நிறுவனங்கள், சமய அமைப்புக்கள், ஊடகங்கள், தொழிற் சங்கங்கள், சமூக கலாசார அமைப்புக்கள், அரசியல் குறியீடுகள், அரசியல் கட்சிகள், அரசாங்கம், சமூக வலைத்தளங்கள் என்பன இப்பணியை மேற்கொள்கின்றன.

04) (அ) அமெரிக்க அரசாங்க முறையில் அரசியல் நிறைவேற்றுப் பகுதியான ஜனாதிபதியும் அவரது ஆலோசகர்களுமான கபினற் செயலாளர்களுமே நிறைவேற்றுத்துறை என்று கருதப்படுகிறது. காங்கிரஸே சட்டத்துறை என்று கருதப்படுகிறது. அது முதல் மன்றமான மக்கள் பிரதிநிதிகள் சபையையும் இரண்டாம் மன்றமான செனற்சபையையும் கொண்ட இருமன்ற முறையாகும்.

✶ அமெரிக்க ஜனாதிபதி காங்கிரஸின் விஷேட கூட்டத் தவணைகளைக் கூட்டுவதன் மூலமான தொடர்புகள்

✶ சட்டவாக்கச் செயன்முறையில் நிறைவேற்று சட்டத்துறைத் தொடர்புகள்

✶ ஜனாதிபதி காங்கிரஸ் உறுப்பினர்களைத் தனியாகவும் குழுவாகவும் சந்தித்து உத்தியோக ரீதியற்ற முறையில் தமது சட்டப் பிரேரணைகளை இட்டு காங்கிரஸ் உறுப்பினர்களுக்கு அறிவூட்டுதல்

* காங்கிரஸால் நிறைவேற்றப்படும் ஒரு மசோதா ஜனாதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டால் அம் மசோதா தொடர்பாக பின்வரும் மாற்று வழிமுறைகளை ஜனாதிபதி கடைப்பிடிப்பார்.
* தமது கையொப்பத்தை இட்டு அதனை அங்கீகரிப்பதன் மூலம் சட்டமாக்குவார்.
* மசோதாவை இரத்து செய்து தமது விருப்பமின்மையைச் சுட்டிக்காட்டி காங்கிரஸிற்கு திருப்பி அனுப்ப முடியும். இது காங்கிரஸின் மீதான ஒரு தடையாக அமைகிறது. அவ்வாறு மேற்கொள்ளும் இரத்தினை காங்கிரசின் இருமன்றுகளினதும் $\frac{2}{3}$ பெரும் பான்மையால் செல்லுபடியற்றதாக்க முடியும்.

(ஆ)
* பாராளுமன்றைக் கூட்டல், ஒத்தி வைத்தல் மற்றும் கலைத்தல்.
* சிம்மாசனப் பிரசங்கத்தை நடாத்துதல்
* பொதுநலவாயத்தின் தலைவி என்ற வகையில் அவரது பணிகள்
* வெளிநாட்டு விவகாரங்கள்
* நீதித்துறைப் பணிகள்

(இ) இந்தியப் பாராளுமன்றத்தின் இரு மன்றுகளுள் ஒன்று மேற்சபை முதியோர் மன்றம். யாப்பின் படி 250 பிரிதிநிதிகளைக் கொண்டது. 12 பேர் சனாதிபதியால் நியமனம். நிலையான மன்றம். உறுப்பினர்களின் பதவிக்காலம் 6 வருடங்கள். உப சனாதிபதி இதன் தலைவராவார்.
* சாதாரண மசோதாக்கள் தொடர்பாக இராஜ்ஜசபா லோகசபாவினை ஒத்த அதிகாரத்தினைப் பெற்றுள்ளது. ஒரு மசோதா சட்டமாவதற்கு இரு மன்றங்களினதும் அங்கீகாரம் தேவைப்படும். மேலதிக விளக்கங்கள்.

(ஈ) சுவிஸ்லாந்தில் ஆட்சி மற்றும் நிறைவேற்று அதிகாரத்தினை சமஷ்டிப் பேரவையே வகிக்கிறது. இது கூட்டு நிர்வாக நிறைவேற்றுத்துறை என்றும் அழைக்கப்படுகிறது. இது 7 உறுப்பினர் களைக் கொண்டதாகும்.
பொதுக் கொள்கைகளைத் தீர்மானித்தல்
சட்ட மூலங்களை ஆரம்பித்து வைத்தல்
சட்டங்களை நடைமுறைப்படுத்தல்
நிதி விடயங்கள்
வெளிநாட்டு உறவுகளைக் கொண்டு நடாத்துதல் ஏனைய விளக்கங்கள்.

## பகுதி - C

01) (அ) புதிய நிதி நிறுவனங்களின் தொகுதிகள் உருவானமை. சட்டத்தின் இறைமையுடன் கூடிய ஆட்சி முறைக்கு அத்திபாரமிடப்படுதல்.
சகல பொலிஸ் செயற்பாடுகளும் நீதித்துறையின் பரிசீலனைக்குக் கீழ் கொண்டு வரப்பட்டன.
* ஒற்றை நீதித்துறை முறைமையை ஸ்தாபித்தல்
* பிரதம நீதியரசரையும் ஏனைய 2 நீதியரசர்களையும் கொண்ட உயர் நீதிமன்றத்துக்கு முழு நீதி அதிகாரங்களையும் ஒப்படைத்தல்
* தேசாதிபதியின் கட்டுப்பாட்டில் இருந்து சிவில் நீதிமன்றங்களை விடுவித்தல். ஏனைய பொருத்தமான விளக்கங்கள்.

(ஆ) சட்டவாக்கல் கழகம் மொத்தமாக 21 உறுப்பினர்களைக் கொண்டது. 11 பேர் உத்தியோக சார்புடையோர். 10 பேர் உத்தியோக சார்பற்றோர். இப்பத்துப் பேரில் 6 பேர் தேசாதிபதியால் நியமிக்கப்பட்டனர்.

| | | |
|---|---|---|
| கரையோரச் சிங்களவர் | - | 02 பேர் |
| தமிழர் | - | 02 பேர் |
| கண்டிச் சிங்களவர் | - | 01 |
| முஸ்லீம் | - | 01 |

இனரீதியாக தேர்தல் மூலம் 04 பேர் மக்களால் தெரிவு செய்யப்பட்டனர்.

| | | |
|---|---|---|
| ஐரோப்பியர் | - | 02 |
| பறங்கியர் | - | 01 |
| கல்வி கற்ற இலங்கையர் | - | 01 |

(இ) ✶ இராசகாரிய முறை ஒழிப்பு
✶ 16 மாகாணங்கள் 5 மாகாணங்களாகக் குறைப்பு
✶ கண்டி கரையோர மாகாணங்கள் ஒரே நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்படல்.
✶ அரசாங்கத்தின் கறுவாவுக்கான ஏகபோக உரிமை நீக்கம்.
✶ ஓய்வூதியம் நீக்கப்படல்
✶ அரசாங்க உத்தியோகத்தர்கள் ஊதியம் குறைக்கப்படல்
ஏனைய மேலதிக விளக்கங்கள்.

(ஈ) ✶ சட்டவாக்கல் கழகத்தின் தலைவராகச் செயற்பட்டமை
✶ சட்டவாக்கல் கழகத்தை தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தமை.
✶ சட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் அதிக அதிகாரங்களைக் கொண்டிருந்தமை.
✶ உத்தியோக சார்புடையோரின் ஆதரவுடன் சட்டவாக்கல் கழகத்தில் பூரண அதிகாரமுடையோராக இருந்தார்.

02) (அ) நாட்டுக்குத் தேவையான சட்டங்களை உருவாக்கல் எனினும் மசோதாக்களை விவாதிக்கும் போது தேசாதிபதியினதும் காரியதரிசிகளினதும் அனுமதி பெறல். தேசாதிபதி சட்ட மசோதாக்களை நிராகரித்தல், பரிசீலித்தல், மீள் பரிசோதனைக்காக திருப்பி அனுப்புதல், தேசாதிபதி தாமதமாக சட்டமியற்றுதல் முதலிய அதிகாரங்களுக்கு உட்பட்டு அரசாங்க சபை இயங்குதல்.

(ஆ) ✶ செனற்சபை ஏற்படுத்தப்படல்.
✶ பல அங்கத்தவர் தேர்தல் தொகுதி உருவாக்கப்படல்.
✶ மகா தேசாதிபதிக்குரிய நியமன அதிகாரங்கள்
✶ கோமறைக் கழகம்
✶ பொதுச்சேவை, நீதிச்சேவை ஆணைக்குழுக்கள்
✶ அரசியலமைப்பின் 29 வது சரத்து
✶ மகா தேசாதிபதியின் அதிகாரங்கள்

(இ) டொனமூர் அரசாங்க முறையில் பிரதம செயலாளர், நிதிச் செயலாளர், நீதிச் செயலாளர் என்ற மூன்று அரச அதிகாரிகள் பதவி வகித்தனர்.
பிரதம செயலாளர் உத்தியோக ரீதியாக அமைச்சரவையின் தலைவராக இருந்தார். இம் மூவரும் அரசாங்க சபையின் உறுப்பினர்களாக இருந்தனர். அங்கு தமது தனிப்பட்ட அபிப்பிராயங்களை முன்வைக்கும் உரிமையும் பெற்றிருந்தனர்.
நிர்வாகக் குழுக்களின் கூட்டங்களிலும் பங்கு பற்றினர்.
பிரதம செயலாளர் அவ்வுரிமையை உத்தியோக ரீதியாகப் பெற்றிருந்ததுடன் ஏனைய இருவரும் அழைப்பின் பெயரில் மட்டுமே பங்கு பற்றினர். அவர்கள் வாக்குரிமையைப் பெற்றிருக்காவிட்டாலும் அதிகாரத்தில் பலம் வாய்ந்தவர்களாக இருந்தனர்.

(ஈ) 1972 யாப்பின் 48(2) சரத்தின் படி நீதித்துறை நீதிப்புனராய்வு அதிகாரத்தைப் பெறவில்லை என்று தெளிவாகின்றது.
ஆனால் 1972 யாப்பின் மூலம் அறிமுகம் செய்யப்பட்ட அரசியல் யாப்பு நீதி மன்றம் தேசிய அரசுப் பேரவையில் சமர்ப்பிக்கப்படும் மசோதாக்கள் அரசியல் யாப்புக்கு இயைபானதா, இயைபற்றதா என்று பரிசீலனை செய்து பார்க்கும் முறை அறிமுகம் செய்யப்பட்டது.
இதன்படி தேசிய அரசுப் பேரவையில் சமர்ப்பிக்கப்படும் மசோதாக்கள் சாதாரண மசோதாக்கள், அவசர மசோதாக்கள் என்று இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டதுடன் யாப்பின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப சாதாரண மசோதா யாப்புக்கு இயைபானதா இல்லையா என்று பரீசிலனை செய்வதற்கு அரசியல் யாப்பு நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டால் அந்நீதி மன்றம் தனது தீர்ப்பினை இரண்டு வாரங்களுக்குள், அது ஓர் அவசர மசோதாவாயின் 24 மணித்தியாலங்களுக்குள்ளும் சபாநாயகருக்கு அறிவிக்க வேண்டும்.

03) (அ) ✶ சோல்பரிப் பாராளுமன்றம் இரண்டு சபைகளைக் கொண்டது.
✶ மக்கள் பிரதிநிதிகள் சபை - 101
✶ 95 பேர் தேர்தல் மூலம் தெரிவு - 06 பேர் நியமனம்
✶ பதவிக்காலம் 5 வருடங்கள்
✶ செனற்சபை 30 அங்கத்தவர்கள்
பதவிக்காலம் 6 வருடங்கள்
✶ சட்டநிர்வாக நீதித்துறைப் பணிகள் மட்டில் அதிகாரங் குறைந்த சபையாகும்.

✶ தேசிய அரசுப் பேரவை ஓரங்க கூட்ட மன்றமாகும்.
✶ அரச அதிகாரத்தின் மீயுயர் கருவி
✶ சட்ட, நிர்வாக, நீதித்துறை சார்ந்த அதிகாரங்கள்.
✶ ஆலோசனை கூற அரசியலமைப்பு நீதிமன்றம் உருவாக்கப்பட்டது.
✶ அங்கத்தவர் எண்ணிக்கையை தேர்தல் நிர்ணயசபை தீர்மானித்தல்.

(ஆ) சோல்பரித் திட்டத்தில் நீதிமன்றங்கள் சட்டங்களை நீதிப்புனராய்வு செய்யலாம்.
முதலாம் குடியரசு யாப்பில் விஷேட நீதிமன்றமான அரசியல் அமைப்பு நீதிமன்றம் தேசிய அரசுப் பேரவைக்கு ஆலோசனை மட்டுமே வழங்கலாம்.

(இ) தேசாதிபதியினதும் குடியரசு சனாதிபதியினதும் தெரிவு முறை, பதவிக்காலம், அதிகாரங்கள் என்பவற்றை ஒப்பிட்டு விளக்கியிருத்தல் வேண்டும்.

(ஈ) சோல்பரித் திட்டத்தில் அரசாங்க சேவை, நீதிச் சேவை ஆணைக்குழுக்கள்
முதலாம் குடியரசு அரசியல் யாப்பில் அரச சேவை ஆலோசனைச் சபை ஒழுங்காற்றுச்சபை நீதிச் சேவை ஆலோசனைச் சபை, ஒழுங்காற்றச்சபை என விளக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

04) (அ) ஜனாதிபதியால் நியமணம்
பதவிக்காலம் 5 ஆண்டுகள்
முதலமைச்சரை நியமித்தல்
ஆளுநரின் விருப்பம் சனாதிபதியின் பணிப்பின் பெயரில் நடைமுறைப்படுத்தப்படும்.
சட்ட, நிர்வாக நீதித்துறை சார்ந்த அதிகாரங்கள்

(ஆ) 17ம் யாப்பு சீர்திருத்தத்தில் உள்ள குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்காக 18 வது யாப்பு சீர்திருத்தம் உருவாக்கப்பட்டது.
இதன் நோக்கம், நிறைவேற்றுத் துறையின் அதிகாரங்களை செறிவாக்குதல். ஒருவர் எத்தனை தடவைகளும் ஜனாதிபதியாகப் பதவி வகித்தல்.
✶ பாராளுமன்றப் பேரவை உருவாக்கம்
✶ மூன்று மாதங்களுக்கொருமுறை ஜனாதிபதி பாராளுமன்றத்துக்கு சென்று உரையாற்றுதல்..

(இ) ஆரம்பம் 1963ம் ஆண்டு 30 ம் திகதி உருவாக்கப்பட்டது.
நோக்கம் - மனித உரிமை மீறப்படுவதை குறைத்தல் அல்லது முடிவுக்குக் கொண்டு வருதல் பெண்களின் உரிமைகளுக்காகவும் போராடுதல்.